# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 04 ஞாயிற்றுக்கிழமை (20-10-1996) UTHAYAN A Liveyl Nationel Tamil Daily கதிர் 246


# இந்திய அரசின் தலையீடு எங்களுக்கு தேவை இல்லை

## இன விவகாரம் குறித்து கதிர்காமர்

கொழும்பு, ஒக்ரோபர் 20

இலங்கையின் இனப் பிரச்சினையில் இந்தியாவின் தலையீடு எமக்குத் தேவை இல்லை. அப்படி இந்தியா தலையிடவும் மாட்டாது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று பி.பி.ஸி. தொலைக்காட்சிச் சேவைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய 'வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இம்மாதம் 24 ஆம் திகதி இலங்கை வருகிறார்.

இதனையொட்டியே லக்ஷ்மன் கதிர்காமர் இந்த பேட்டியை பி.பி.ஸி. தொலைக் காட்சிச் சேவைக்கு வழங்கினார்.

புலிகளின் பிரிவினைக் கோரிக்கைக்கு ஆதரவு தரப் போவதில்லை என்று இந்தியா எங்களுக்கு மீண்டும் மீண்டும் உறுதி அளித்துள்ளது. இந்திய மத்திய அரசாங்கத்தில் தமிழ்நாடு முதல்வர் கருணாநிதியும் ஒரு பங்குதாரராக இருப்பதால் அவரது நிலைப்பாட்டிலும் மாற்றம் இருக்காது என்று நம்புகிறோம்— என்றும் லக்ஷ்மன் கதிர்காமர் தமது பேட்டியில் தெரிவித்தார்.

முல்லைத்தீவுக் காட்டில்தற்போது உள்ள விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைப் பிடிப்பதற்கு இந்தியாவின் உதவியைக் கோருவீர்களா என்று பி.பி.ஸி. செய்தியாளர் கேட்டதற்கு—

'அப்படி ஒரு தேவை ஏற்படவில்லை' என்று லக்ஷ்மன்

(8 ஆம் பக்கம் பார்க்க)



## காயமடைந்த பொலீஸ் பலாலிக்கு

யாழ்ப்பாணம், ஒக். 20

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் சந்திரத்துச் சந்தியில் இடம் பெற்ற கிரெனேட் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பொலீஸார் ஒருவரும் காயம் அடைந்தார் அல்லவா?

அவர் தற்பொழுது பலாலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்று பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவிக்கிறது. (இ-3)

## தமிழ் நாடு அரசு மறுப்பு

சென்னை, ஒக். 20

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா 1992 ஆம் ஆண்டு 3 லட்சம் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொண்டது தொடர்பான வழக்கை மத்திய புலனாய்வுத் துறையிலிருந்து மாநிலக் காவல் துறைக்கு

( 8ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு எதிரான போரில் சேர இளைஞருக்கு அனுருத்த அழைப்பு

கொழும்பு ஒக். 20

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் சேர்ந்து கொள்ளுமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

முல்கிரிகல என்ற இடத்தில் நேற்று நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போது அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அரசியல் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள புலிகள் மறுப்புத் தெரிவித்துள்ளதனால், அரசாங்கம் யுத்தத்தில் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

எனவே பயங்கரவாதத்தை ஒழிப்பது, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முன்னோடி அம்சமாகி விட்டது.

யுத்தத்துக்குச் செல விடப்படும் பணம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், உத்தியோக வாய்ப்புக்களையும் மந்தமடையச் செய்கிறது.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வளங்களை உருவாக்கும் வகையில் நாட்டில் விரைவில் அமைதி நிலைநாட்டப்பட வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார்,

ஜனநாயகத்தை மதிக்கு சகல பிரஜைகளும் அரசாங்கத்தை எதிர்க்க முயற்சி செய்யக் கூடாது என்றும் ஆயுதப் புரட்சிகளில் ஈடுபடக் கூடாது என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (இ-3)

## எண்ணெய்த் தாங்கிகளை தகர்ப்பதற்குத் திட்டம்?

### "டெட்ரினேட்டர்" கண்டு பிடிப்பு

கொழும்பு, ஒக். 20

கொழும்பு, புளுமெண்டல் வீதியில் உள்ள எரிபொருள் நிலைய எண்ணெய்த் தாங்கிகளை வெடி வைத்து அழிப்பதற்கு புலிகள் போட்டிருந்த திட்டம் முறியடிக்கப்பட்டு விட்டதாக பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த வியாழக்கிழமை மாலை 4-30மணி அளவில் இந்த எண்ணெய்த் தாங்கிகளுக்கு சமீபமாக இரண்டு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை அதிபர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்கள்

### எல்லாளன் படை அனுப்பியது

கொழும்பு, ஒக்20

ஊவா மாகாணத்தில் உள்ள பெரும்பாலான தமிழ், முஸ்லிம் பாடசாலை அதிபர்களுக்கு எல்லாளன் படையின் பேரில் எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இக்கடிதங்கள் கிடைக்கப் பெற்ற அதிபர்கள், பதுளை பொலீஸ் நிலையத்திற்கும் பதுளைப்பகுதி கல்வித் திணைக்கள அலுவலகத்துக்கும் சென்று முறையிட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்கு குடாநாட்டில் சிவில் நிர்வாகக் குழுக்கள்

## இராணுவத்தினர் அனுசரணையுடன் அமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 20

மக்களின் குறைகளை ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வு காண்பதற்காக, இராணுவத்தினரின் அனுசரணையுடன் சிவில் நிர்வாகக் குழுக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உருவாக்கப்பட்டுள்ளன.

இக்குழுக்கள் கிராம சேவையாளர் பிரிவுகள் மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளதாக — யாழ். இராணுவத் தளபதியின் அலுவலகத்திலிருந்து விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''ரிவிரச'' இராணுவ நடவடிக்கையின் மூலம் மீட்டெடுக்கப்பட்ட யாழ். குடாநாட்டில், மக்களின் குறைகளை ஆராய்வதற்காக கிராம சேவையாளர் மட்டத்தில் சிவில் நிர்வாகக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

தற்போது படிப்படியாக சமுக நிலைக்கு வந்து கொண்டிருக்கும் வாழ்க்கையில் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வுகளை வழங்குவதற்கு இதன்

## உள்ளூராட்சித்தேர்தல்கள் ஏப்ரலுக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 20

உள்ளூராட்சித் தேர்தல்கள் யாவும் பிற்போடப்பட்டுள்ளன. அவசர காலச்சட்ட விதிகளுக்கமைய உள்ளூராட்சித் தேர்தல்களை 1997 ஆம் ஆண்டுஏப்ரல் மாதம் 14 ஆம் திகதிவரை ஜனாதிபதி பிற்போட்டுள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நாளை திங்கட்கிழமை வெளியிடப்படும்.

# மட்டக்களப்பு இருளில்!

மின் கம்பங்களும் மின் மாற்றிகளும் புலிகளின் தாக்குதலினால் சேதமடைந்ததால் மட்டக்களப்பு மாவட்டம் இருளில் மூழ்கியுள்ளது.

இங்கினியாகலவில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மின்சாரத்தைக் கடத்திச் செல்லும் மின்கம்பிகள் கடந்த 8 ஆம் திகதி புலிகளால் சேதப்படுத்தப்பட்டன.

இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்துக்கான மின் விநியோகம் ஹபரணவில் இருந்து வழங்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை ஹபரண மின் நிலையமும் தாக்கப்பட்டதால் அது செயல் இழந்தது.

இதனையடுத்து மட்டக்களப்பு நகரம் இருளில் மூழ்கி உள்ளது.

இருளைப் பயன்படுத்தி மட்டக்களப்பில் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என அஞ்சப்படுவதால் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## சந்திரிகாவுக்கு மகாநாயக்கர் பாராட்டு

கொழும்பு, ஒக். 20

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட அணிகர முடிவு இந் நாட்டின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

இப்படி அஸ்கிரிய, மல்வத்த பீட மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர் என தினமின சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அனுமதி: 26, 000 பேர் விண்ணப்பம்

பல்கலைக்கழக அனுமதி கோரி இதுவரை 26 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் வட பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களின் விண்ணப்பங்கள் இன்னும் வந்து சேர்ந்த வண்ணம் இருப்பதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

1979 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பல்கலைக்கழக அனுமதி கோரி ஆகக் கூடுதலான மாணவர்கள் விண்ணப்பித்திருப்பது இம்முறைதான் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மானிய ஆணைக் குழுவுக்கு கிடைத்த விண்ணப்பங்கள் மாவட்ட ரீதியாக இப்போது வகுக்கப்பட்டுவருவதாக ஆணைக் குழுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான வெட்டுப்புள்ளி விவரம் டிசம்பர் முதல் வாரத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப் படுகிறது (இ-3)

# ஆஸ்பத்திரியில் கட்டாக்காலி நாய்கள்

யாழ். ஆஸ்பத்திரியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை மீண்டும் அதிகரித்துள்ளது.

ஆஸ்பத்திரி நடை பாதைகளிலும், வாட்டுகளுக்குள்ளும், மலசலம் கழித்தும், குப்பைவாளிகளை இழுத்துக் கொட்டியும் இந்த நாய்கள் பெரும் தொல்லை கொடுக்கின்றன என்று தெரிவிக்கப் படுகிறது. (இ-15)

## விண்ணப்பப் படிவங்கள்

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் பட்டப் படிப்பியல் நெறிகளுக்கான (1996 — 1997 கல்வியாண்டு) அனுமதி விண்ணப்பங்கள் இப்போது விற்பனையாகின்றன. விரைந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

பூபாலசிங்கம்
புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி 3313)

# படகு விபத்தில் இறந்த மற்றும் 7பேரின் விவரம்

கொழும்பு, ஒக். 20

கடந்த 14ஆம் திகதி மன்னாரில் இருந்து இந்தியா சென்று கொண்டிருந்த படகு விபத்தில் இறந்த 14 பேரில் மேலும் சிலரின் விவரங்கள் கிடைத்துள்ளன.

கடந்த 18ஆம் திகதி உதயனில் ஏழு பேரின் பெயர் விவரங்கள் வெளியாகியிருந்தன. ஏனைய ஏழு பேரின் விவரங்கள் வருமாறு:-

★ அருந்தவராசா ரதி (80 வயது) — ஆதி கோவிலடி, வல்வெட்டித்துறை.

★ அவரது மகள் அனித்தா (5 வயது)

★ யுவராசா ராதா (31வயது) — ஆதி கோவிலடி, வல்வெட்டித்துறை.

★ செ. புஷ்பராணி (53வயது) — நல்லூர்.

★ மேரி திரேசா — (54வயது) — நல்லூர்.

★ ப. கனகசபை (23வயது) — யாழ். கச்சேரியடி.

★ சிறீஸ்கந்தராசா (14வயது) — கரடிப்போக்கு.

## பரிசளிப்பு விழா 1996

யா/ வட்டு இந்துக் கல்லூரி, சித்தன்கேணி.

**21 — 10 — 1996** திங்கள் முற்பகல் 9. 30 மணிக்கு
(பழையநேரம்)

கல்லூரி மண்டபத்தில்: திரு. ச. இராமலிங்கம்
(பதில் அதிபர்) தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினர்:-
திரு. ப. விக்னேஸ்வரன் அவர்கள்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர் - சங்காணைக்கோட்டம்)

சிறப்பு விருந்தினர்:-
பிரம்மஸ்ரீ ப. சர்வேஸ்வர ஐயர் அவர்கள்
(முன்னாள் உப அதிபர்)

பெற்றோர், பழையமாணவர், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள்.

யா/ வட்டு இந்துக்கல்லூரி. (43249)


BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

★ A/L 97, 98 தூய, பிரயோக கணிதம் ★


★ இவ்வாரம் ஆரம்பமாகும் பகுதிகள் ★
PURE :— ★ சிக்கலெண், காவிகள் ★
APP :— ★ உராய்வு, சமநிலை ★

ஆசிரியர்:

திரு. ப. குணம் B. Sc

(43226)


# ஆறாம் ஆண்டு நினைவலைகள்





அமரர்கள்

கந்தையா ஜீவரட்ணம் (குமார்)
(வ. பி, போ. ச. மினிபஸ் சாரதி)

திருமதி சுமதி ஜீவரட்ணம்

அன்னையின் மடியில்: **17-07-1960**

ஆண்டவன் அடியில்: **28-09-1990**

திதி: **20-10-1996**


நல் இதயங்கள் இரண்டு உள்ளத்தால் ஒன்றி
இல் வாழ்வில் இன்பமாய் வாழ்ந்தன
புல் அறிவு வஞ்சகரினால் வாழ்வு முடிந்தது
சொல் இறைவா! இது விதி முறைபோ?
ஆறு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆறாது எம் மனங்களில் உங்கள் நினைவு!

உங்கள் பிரிவால் துயருறும்:

ஐயா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்.

7, சென்மேரிஸ் 2 ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (43253)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பூவுலகில்:
**24-01-1979**

பொன்னுலகில்:
**22-07-1996**

செல்வன்

## வேலுப்பிள்ளை தயாநிதி

22 - 07 - 1996 இல் சிவபதமடைந்த செல்வன் வேலுப்பிள்ளை தயாநிதி அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டோருக்கும், கடித மூலமும், நேரிலும் ஆறுதல் நல்கியோருக்கும், இதர உதவிகள் புரிந்தோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (20-10-1996) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியை மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

சரணவாய் மத்தி,
கரவெட்டி. ([illegible])

# 1 ஆம் ஆண்டின் நினைவுப் பூக்கள்

மண் மகிழ
20-7-1921



கண் நெகிழ
30-10-1995

## அமரர் க. சி. தாமோதரம்பிள்ளை

(உரிமையாளர், முருகன் அரிசி ஆலை)

திதி: **20 - 10 - 96**

சீராண்ட செல்வமே சிவன்தாள் நீயடைந்து
ஓராண்டானதுவோ உன்னையெண்ணித் துடிக்கின்றோம்
பாராண்ட பண்புற்றே பான்மைமிகு மிறைவன்தாள்
பேராண்டு வாழியநீர் பெருமையிந்த உலகிருக்கும்.

ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள்!

— பணியாளர்கள்

முருகன் களஞ்சியம்,
முருகன் அரிசி ஆலை,
முருகன் ஹாட்வெயர்ஸ்.

கண்டி வீதி,
சாவகச்சேரி.
([illegible])


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரசிம்மராவ் மீதான வழக்குகளை விதியான் பவனில் நடத்த முடிவு

புதுடில்லி, ஒக். 20

முன்னாள் பிரதமர் பி வி. நரசிம்மராவ் தொடர்பான வழக்குகளை புதுடில்லி வித்யான் பவனில் நடத்துவது என டில்லி உயர் நீதி மன்றம் முடிவு செய்துள்ளது.

அந்த வழக்குகளின் விசாரணைகளை நடத்த வித்யான் பவன் தகுந்த பாதுகாப்பான இடமாக இருக்கும் என சிறப்புக் காவற் படையினரும் காவற்படையினரும் தெரிவித்ததை அடுத்து நரசிம்மராவ் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ள லகுபாய் பதக் மோசடி வழக்கு, செண் கீட் போலி ஆவணத் தயாரிப்பு வழக்கு ஆகியவற்றை வித்யான் பவனில் விசாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (இ-10)

# தலிபான் படைகளுக்கு மசூத் இறுதி எச்சரிக்கை

காபூல், ஒக். 20

காபூல் நகரைத் தம்வசம் வைத்துள்ள தலிபான் படைகள் தலைநகரை விட்டு விலகி ஐ. நா. படைகள் வசம் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் எனவும், தவறினால் இரு படைகளுக்கும் யுத்தம் நடப்பதைத் தவிர்க்க முடியாதென வும் ஆப்கான் முன்னாள் அரசுப் படைகளின் தலைவர் மசூத் எச்சரித்துள்ளார்.

ஐ நா. வின் மேற்பார்வையில் அனைத்துக் கட்சிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் மசூத் கோரியுள்ளார். (இ-10)

## விஷவாயு குற்றச்சாட்டை ஏற்கிறார்

ஜப்பானில் சென்ற வருடம் ரயில் சுரங்கப் பாதையில் இடம் பெற்ற விஷவாயுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஜப்பானிய மதத் தலைவர் ஷோபோ சஹாரா ஆறுமாத கால மௌனத்தின் பின் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வாய் திறந்து பேசினார்.

ரோக்கியோ ரயில் சுரங்கப் பாதையில் விஷவாயு வைத்தற்கான பொறுப்பை தாங்கள் ஏற்றுக்கொள்ளுவதாகவும் —

ஆனால் கொலை மற்றும் வேறுவிதமான குற்றச்சாட்டுகளில் தான் நிரபராதி என்றும் அவர் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் முயற்சி

பாகிஸ்தான் ஜனாதிபதி பாருக் லெஹாரி, ஆப்கான் தலிபான் இயக்கத் தலைவர் முல்லா முகமட் ஒமரேயையும் உஷ்பெக் அதிபர் ஜெனரல் பொஸ்டமையும் நேற்று தாஷ்கன்டில் சந்தித்தார். ஆப்கானில் அமைதி ஏற்படுத்துவது குறித்துப் பேசினர்.

# உலக அரங்கில்

## தீ வைத்த 40 பேர் கைது

இந்தோனேஷியாவில் தேவாலயங்களுக்கு தீ வைத்தது, 6 கத்தோலிக்கர்களைக் கொலை செய்தது ஆகியவை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முஸ்லிம்கள் ஆயிரக்கணக்கில் ஒன்று கூடி கடந்தவாரம் கிழக்கு ஜாவாவிலுள்ள சிட்டுகொண்டோ நகரில் அமைந்துள்ள 23 தேவாலயங்களுக்கு தீயிட்டனர் எனவும் —

6 பேரைக் கொன்றுள்ளனர் எனவும் இந்தோனிஷிய திருச்சபைகள் ஒன்றிணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## மிகப் பழைய தாவர இனம் கண்டுபிடிப்பு

ஆஸ்திரேலியாவிலுள்ள தஷ்மீனியத்தீவின் பின்தங்கிய ஒரு மலைப் பிரதேசத்தில் சுமார் 40 ஆயிரம் வருட கால தாவரம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த தாவர இனமே உலகில் அதிக காலம் உயிருடன் உள்ள தாவர இனம் என ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் கூறுவதாக றோய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

பனிக் கட்டிகளால் மூடப்பட்டிருந்த இந்தத் தாவரம் சுமார் ஒரு கிலோ மீற்றர் சுற்றுவட்டத்திற்கு பரந்து வளர்ந்திருக்கக் காணப்பட்டது.

இதற்கு முன்னர் கலிபோர்னியாவிலுள்ள [illegible] என்னும் மரமே உலகில் மிகப் பழைய தாவரமாக இருந்து வந்தது. இதன் வயது 11 ஆயிரத்து 700 ஆண்டுகளாகும்.

# முன்னணி அரசுக்கு எதிராக பாரதீயஜனதா போர்க்கொடி

உத்தரப் பிரதேசத்தில் அரசமைக்க முடியாத நிலை தோன்றியுள்ளதை அடுத்து இந்திய மத்திய அரசைக் கவிழ்ப்பதற்கு பாரதீய ஜனதா உறுதி பூண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

உத்தரப் பிரதேசத்தின் ஆட்சி மீண்டும் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதை அடுத்தே, மத்தியில் உள்ள தேவகௌடாவின் ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்க்க தீவிரவாத இந்துக்கள் போர்க் கொடி தூக்கி உள்ளனர்.


## நியூ வீணா கானம்

இல. 16/2, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

நாளை 21 - 10 - 96 விஜயதசமியை முன்னிட்டு மேலை/கீழைத்தேய வாத்திய வகுப்புகள் தொடங்கப்படும்:

நேரம்: **3 00 P.m — 5.30 P.m**

செல்வி வாசுகி ரங்கன்

(43246)


## சாவகச்சேரி பிரதேச சபை
## கேள்வி அறிவித்தல்

| | |
|---|---|
| கொடிகாமம் சந்தை உட்புறக்கடைகள் | 11 |
| கைதடிச் சந்தைக் கடைகள் | 02 |

1. சாவகச்சேரி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் உள்ள கொடிகாமம் சந்தை உட்புறமுள்ள 11 கடைகளிலும் கைதடிச் சந்தையில் உள்ள 02 கடைகளிலும், வியாபாரம் செய்யும் உரிமைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து 4-11-1996 நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. கேள்விப்பத்திரங்கள் சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமைப் பணிமனையில் 1-11-96 நண்பகல் 12-00 மணிவரை கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரமான கேள்விவைப்புப் பணத்தையும், மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். கேளவிப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் தமது தேசிய அடையாள அட்டையை எடுத்து வருதல் வேண்டும்.
3. கேள்விகள் 5-11-96 முற்பகல் 10-00 மணிக்குத் திறக்கப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.
4. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப் பிரதியை குறிக்கப்பட்ட தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக ''விசேட ஆணையாளர், சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனை, சமநல சேவை நிலையக்கட்டடம், மீசாலை வடக்கு, கொடிகாமம்'' என்ற முகவரிக்கும் அதன் இணைப்பிரதியை ''உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேச செயலகம், சாவகச்சேரி'' என்ற முகவரிக்கும் கடித உறையின் மேல் மூலையில் எந்தக்கடைக்கான கேள்வி எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
5. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் சபையால் அங்கீகரிக்கப்படும் முறையிலான கதவுகளையும், மின்சார இணைப்பு வேலைகளையும் தங்களது செலவில் தயாரித்து பொருத்துதல் வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
7. கடைகளைத் தெரிவு செய்யும் முன்னுரிமை கூடிய கேள்வியின் அடிப்படையில் வழங்கப்படும் தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டது பற்றி அறிவிக்கப்பட்ட கடிதம் கிடைத்து ஏழு நாள்களுக்குள் முழுப்பணத்தையும் செலுத்தி ஒப்பந்தமொன்றைச் செய்து கடையைப் பொறுப்பேற்காது விடில் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படுவதுடன் கேள்விப்பாதுகாப்புப் பணமும் மீளளிக்கப்பட மாட்டா. கடையைப் பொறுப்பேற்ற திகதியிலிருந்து சபையால் விதிக்கப்படும் மாத வாடகையை செலுத்த வேண்டும்.
8. ஏற்கனவே இக் கடைகளுக்கு விண்ணப்பித்து கடை கிடைத்து பணம் செலுத்தத் தவறியவர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் விண்ணப்பிக்க முடியாது.
9. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை சாவகச்சேரி பிரதேச சபை தலைமைப் பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

கேள்வி அட்டவணை

| விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| கொடிகாமம் சந்தை உட்புறக் கடைகள் | 1,00,000/- | 2,000/- | 250/- |
| கைதடிச் சந்தை கடைகள் | 50 000/- | 1,000/- | 250/- |

பு. சுந்தரம்பிள்ளை
விசேட ஆணையாளர்
சாவகச்சேரி பிரதேச சபை

சாவகச்சேரி பிரதேச சபை,
கமநல சேவை நிலையக் கட்டடம்,
மீசாலை வடக்கு, கொடிகாமம்.
15. 10. 96

(சி-3311)


கரவெட்டி கிழக்கு
## கனகராஜவளவு பிள்ளையார் ஆலய புனருத்தாரணம்

மேற்படி ஆலய புனருத்தாரண வேலைகளை வைரக்கல் மூலம் செய்யவிருப்பதால் அனுபவமுள்ள சிற்பாசாரியார்கள் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வதற்கு **15-11-96-** க்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திருப்பணிச் சபையினர்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
ஐ. கணேசன் (தலைவர்)
யார்க்கரு,
தெடுத்தனை,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(43252)

## MODERN EDUCATION CENTRE
KARAVEDDY

**G. A. Q.** வகுப்புகள்

பிரபல ஆசிரியர்களுடன் ஆரம்பமாகின்றன

அனுமதிகளை **21 - 10 - 1996** இற்கிடையில் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

—★— —★— —★—

நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன

**97** பகல்நேர வகுப்புகள்

இரசாயனவியல்: திரு. வசீகரன்
வெள்ளிக்கிழமை காலை **6-45** மணி

தூய / பிரயோக ]-கணிதம்: திரு. வெக்ரர் வேலாயுதம்
வெள்ளிக்கிழமை காலை **8-00** மணி.

பௌதிகவியல்: திரு. சூரியநாதன்

— நிர்வாகி

(சி/3200)


## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

### பொன்னையா பழனிப்பிள்ளை
(முன்னாள் கிராம விதானையார், அல்வாய் வடக்கு)

எமது தந்தையாரது மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் சகல உதவிகளைச் செய்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

21 - 10 - 96 திங்கட்கிழமை (நாளை) நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், நண்பகல் நடைபெறவிருக்கும் மதிய போசனத்திலும் அனைவரும் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

தனிப்பட்ட முறையில் அழைப்பினை வழங்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

ப. ஈஸ்வரநாதன் (மகன்),
வை. சிவலிங்கம் (மருமகன்).

சினட்டி,
வதிரி,
கரவெட்டி.

(43251)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

பெண்களுக்கான புத்தம் புதிய (Omax With Gold Chain) கைக்கடிகாரம் 20-10-96 காலை ஆஸ்பத்திரி வீதிக்கும், கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு கூர்ந்து நியூரோன் எலெக்ரிக்கல்ஸ் ஸ்தாபனத்தில் அல்லது எஸ். பத்மநாதன், இல: 95A, கோவில் வீதி, நல்லூர் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(43243)

## O/L கணிதம்

1100 வினாக்கள் மூலம் விரைவாக Distinction, Credit பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். B.Sc ஆசிரியர், 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி.
(43197)

## ஓர்கன் வகுப்புகள்

ஓர்கன் (Organ), கிற்றார் (Guitar), புல்லாங்குழல் (Flute) வகுப்புகள் எல்லா நாள்களிலும், பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறுகின்றன. முகவரி: இல. 238, கோவில் வீதி, நல்லூர். (ஆலயத்திலிருந்து 300 யார்) (42941)

## வகுப்புகள்

வங்கியாளர் பரீட்சைக்கான கணக்கியல், பொருளியல் வகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர்பு: இல. 168, கோவில் வீதி, நல்லூர். [கந்தன் கருணைக்கு அருகாமை] (43231)

## இசை வகுப்புகள்

ஓர்கன் (Organ), கிற்றார் (Guitar), புல்லாங்குழல் (Flute) வகுப்புகள் 21-10-96 அன்று (விஜய தசமி) காலை 8.00 மணிக்கு ஆரம்பம். முகவரி: புவனகிரி, அரசடி பிள்ளையார் கோயிலடி, ஸ்ரேசன் வீதி, கோண்டாவில். (42942)

## "நீமியா உரம்"

நீமியா பாவித்தவர்கள் மீண்டும் பாவிக்கிறார்கள். பாராட்டுகிறார்கள். அமோக விளைச்சலுக்கும், கிருமிகளின் தாக்கத்திலிருந்து பயிர் பாதுகாப்பிற்கும் பாவியுங்கள் "நீமியா". கமநல சேவை நிலையங்களிலும், அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது. "மில்க்வைற்"
(சி/3287)

## மாறிய சைக்கிள்

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சந்தையில் துவிச்சக்கரவண்டி 25-09-96 கைமாறுதலாக எடுக்கப்பட்டு றிக்கோ ஹோட்டலில் வைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். முகாமையாளர், றிக்கோ ஹோட்டல், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (43241)

## திருமண சேவை

விவாகப் பொருத்தம் நிச்சயித்துக் கொடுக்கப்படும். குறிப்பு பார்த்து குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும். ஆண் பெண் ஜாதகங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும் க. திருஞானசம்பந்தர். சோதிடர் இராமகிருஷ்ண வீதி, கோண்டாவில். (43244)

## ஆரோக்கிய வாழ்வு

ஆரோக்கிய வாழ்விற்கு, காபோலிக் கலந்த மில்க்வைற் மெடிக்கேட்டட் சோப் பாவியுங்கள். எங்கும் விற்பனையாகின்றது. 1 கட்டி — ரூபா 8/- 10 கட்டிகள் ரூபா 75/- மேலுறைகளுக்குப் பரிசில்கள் உண்டு. மில்க்வைற்.
(சி/3312)

# எமது வாடிக்கையாளர் கவனத்திற்கு!

எங்களிடம்:

★ மென்பான தயாரிப்பு பொருள்கள்
★ ஐஸ்கிறீம் தயாரிப்பு பொருள்கள்
★ எசன்ஸ் வகைகள்
★ மாஜரின் வகைகள்
★ இந்திய ஊதுபத்தி வகைகள்
★ நெய் வகைகள்
★ டை வகைகள்
★ றோயல் பேக்கிங் பவுடர்
★ றோயல் கஸ்டட் பவுடர்
★ றோயல் அறோறுட் (மா)
★ றோயல் குளுக்கோஸ்
★ றோயல் நீலம்
★ றோயல் கொக்கோ பவுடர்
★ றோயல் ஜெலட்டின்
★ நீயூ தீபா ஜெஸ்மின் ரல்க்
★ ரல்கம் பவுடர் (சொரி)
★ உலர்த்திய தேங்காய்த் துருவல் D/C
★ ஜெலடின் லூஸ்
★ பபுள்கம்
★ கோன் புளவர் (CORN FLOVR)
★ பிஸ்கட் அமோனியா
★ ஐசிங் சுகர்
★ கோழிச்சாயம்
★ வெற்றுப் போத்தல் 1 அவுன்ஸ்
★ லிக்குவிட் (LIQUID) குளுக்கோஸ்
★ சிற்றிக் அசிட் (CITRIC ACID)


மற்றும் பல.

## சிவா நறுமண பூங்கா

இல: 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3306)

# 6ஆம் மாத நினைவஞ்சலி



## அமரர் கதிரவேலு பரமலிங்கம்

(பிரபல கார் புறோக்கர்)

மலர்வு 03-01-1948 | உதிர்வு 20-04-1996

திதி: 20-10-1996

பாசமுள்ள எங்கள் அப்பாவே!
மாதம் ஆறு சென்றதையா
உணர்விழந்து வாடுகிறோம்
பாசமுடன் எங்கள் பாதுகாவலனாக இருந்தீர்கள்
பரிதவிக்க விட்டதென்ன?
வாழப்பிடிப்பில்லை வழிநடத்த யாருமில்லை
கண்கள் கலங்குதப்பா
உங்கள் நினைவினை மறப்பதற்கில்லை
எங்கள் பூவுலக வாழ்வு முடியும்வரை.
உங்கள் ஆத்மா எங்களுடனே வாழுமப்பா
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
பிள்ளைகள்: கஜன், சுஜீ, ஜனா

முத்துமாரி அம்மன் கோவிலடி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
(8976)

# திருத்திக் கொடுக்கப்படும்

சகல இன ★ ரெலிவிசன் ★ வீடியோ டெக் ★ றேடியோ
என்பன திருத்திக் கொடுக்கப்படும். T. V., றேடியோ, வீடியோ டெக் சேக்கிற் பெற்றுக் கொள்ளலாம். அன்ரனா பொருத்திக் கொடுக்கப்படும்.

## JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை)
(43234)

# உயர்தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் -யாழ்ப்பாணம்

உயர் தேசிய கணக்கியல் 2-ம் ஆண்டு, உயர் தேசிய வர்த்தகவியல் 2-ம்ஆண்டு, தேசிய வணிக டிப்புளோமா 2-ம் ஆண்டு, தேசிய நிதியியல் டிப்புளோமா 2-ம் ஆண்டு, தேசிய ஆங்கில டிப்புளோமா 2-ம் ஆண்டு விரிவுரைகள் **23—10—1996** புதன்கிழமை ஆரம்பமாகும்.

விரிவுரைகள் கலாசாலை வீதியில் உள்ள சைவ வித்தியா விருத்திச் சங்க மண்டபத்தில் தொடர்ந்து நடைபெறும்.

வீ. எஸ். கீதபொன்கலன்
ஒருங்கிணைப்பாளர்,
உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்.

(சி/3304)

# 1-ம் வருட நினைவஞ்சலி



## கதிரவேலு சந்திரராசா

(வலிகாமம் ப. தெ. வ. அ. சங்க கொத்தணி பொது முகாமையாளர்)

உதயம்: 05 — 05 — 1953 | அஸ்தமனம்: 31 — 10 — 1995

திதி: ஐப்பசி பூர்வபட்ச நவமி
20 - 10 - 1996 ஞாயிற்றுக்கிழமை

அன்பின் திருவுருவே பாசத்தின் மணிவிளக்கே யெம்
சிந்தை கலங்கியிங்கு திணறித் திகைக்கின்றோம்
எங்கள்
கண்ணில் திருமணியாய் காத்த எம் சுடரொளியே
இன்று
தன்னந் தனியாக எமைத் தவிக்கவிட்டுச் சென்றது
. மேனய்யா.
சந்திரனாய் வந்துதித்தாய் காலமெல்லாம் ஒளிகாட்ட
சிந்தை குளிரப்பல சிறப்பெல்லாம் செய்து விட்டாய்
விண்ணில் பறப்பதற்கோ இதுபோலும்
திறன்படைத்தாய்
எம்மை இனிக்காண சிறகடித்து வாராயோ சந்திரனே!

பிரிவால் துயருறும்:

ச. சந்திரவதனா (மனைவி), ச. அசானி (மகள்),
ச. அநாத் (மகன்), ச. அக்சா (மகள்),
நா. பூபாலசிங்கம் குடும்பம் - கோண்டாவில்,
சரஸ்வதி குமாரசாமி - கோண்டாவில்,
சகோதரர்கள்:- க. சற்குணம் (மானிப்பாய்),
க. கமலசேகரம் (பருத்தித்துறை),
இராஜேஸ்வரி குமாரசாமி (மானிப்பாய்)

நா. பூபாலசிங்கம்
பொற்பதி றோட்,
கோண்டாவில்.
(43207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... நூலகம்.

# புலிகளால் தகர்க்கப்படும் ஆபத்து இருந்தும் முல்லை. முகாமை அரசு பேணியது ஏன்?

இராணுவச் செய்திகள் மீதான தணிக்கையை நியாயப்படுத்தி ஐந்து தினங்களுக்கு முன்னர் பகிரங்கமாகக்கருத்து வெளியிட்ட பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை அதற்குள் திடீரென தமது நிலைப் பாட்டில் 'பல்டி' அடித்துக் கொண்டார்.

கடந்த மூன்றாம் திகதி செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசிய அவர் தணிக்கையை நீக்கும் நோக்கம் அறவே இல்லை என்றார்; 'பரபரப்பான அல்லது அரசியல் நோக்கம் கொண்ட' செய்திகளை' வெளியிடுவதன் மூலம் 'தேவையற்ற பிரச்சி

> கடந்த ஜூலை 18 ஆம் திகதி அதிகாலை புலிகள் ஆரம்பித்த 'ஓயாத அலைகள்' அதிரடிப்பாய்ச்சல் இராணுவ நடவடிக்கையினால் முல்லைத் தீவு இராணுவ முகாம் தகர்த்தழிக்கப்பட்டது. அப்போது நடைமுறையிலிருந்த தணிக்கை காரணமாக அந்தத் தாக்குதல் பற்றிய விவரங்கள் வெளிவரவில்லை. இப்போது தணிக்கை நீக்கப்பட்டதை அடுத்து அது பற்றிய விவரங்கள், தகவல்கள் கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவரத்தொடங்கியுள்ளன அத்தகவல்களின் தொகுப்பு இக்கட்டுரைத் தொடர் (ஆ-ர்)

னைகளை பத்திரிகைகள் கிளப்புகின்றன என்று உள்ளூர் பத்திரிகைளை ஒரு 'பிடி பிடித்தார்'!

ஆனால் ஐந்து நாள் கழித்து கடந்த எட்டாம் திகதி நாடாளுமன்றத்தில் அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணையைச் சமர்ப்பித்த போது அவர் தமது நிலைப்பாட்டை அடியோடு மாற்றிக் கொண்டார்.

அரசின் உயர்பீடமான அமைச்சரவைக்குக் கூட முன்பின் தகவல் தராமல், நாடாளுமன்றத்தில் அவர் விடுத்த திடீர் அறிவிப்பு அரச தரப்பையே ஆச்சரியப்பட வைத்தது.

இந்தத் திடீர் மாற்றத்துக்கு திட்டவட்டமான காரணம் என்னவென்பது தெளிவாகத் தெரியவில்லை.

### கதிர்காமருக்கு ஏற்பட்ட நெருக்கடி

ஆனால் அண்மையில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரில் பங்குபற்றுவதற்காக நியூயோர்க் சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு இங்கு அரசு விதித்திருந்த தணிக்கை சில நெருக்கடிகளைக் கொடுத்தது என்பது உண்மைதான் ஐ.நா. சபைக் கூட்டத் தொடருக்கு வந்திருந்த ஏனைய நாடுகளின் அமைச்சர்கள், நாட்டுத் தலைவர்கள், வெளிநாட்டில் வதியும் இலங்கையர் போன்றோர் இங்கு உள்ளூர்ப் பத்திரிகைகள் மீது விதிக்கப் பட்டிருக்கும் தணிக்கை குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் 'நோண்டி, நோண்டி' கேள்வி எழுப்பத் தவறவேயில்லை.

அண்மையில் கனடாவுக்கும், அமெரிக்காவுக்கும் விஜயம் மேற்கொண்ட நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸுக்கும் இந்த அனுபவமே ஏற்பட்டது. குறிப்பாகச் சொல்லப் போனால் —

இராணுவச் செய்திகள் தொடர்பாக வெளியூர் செய்தி நிறுவனங்கள் மீது தணிக்கை ஏதும் விதிக்காமல் — உள்ளூர்ப் பத்திரிகைகள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்கள் மீது மட்டும்

## பகுதி - 1

தணிக்கை விதித்ததையும் வடக்கு — கிழக்கு யுத்த முனைப் பிரதேசங்களுக்கு செய்தியாளர்கள் செல்வதற்கு தடை விதித்ததையும் அபிவிருத்தியடைந்த நாடுகள் அடியோடு ஏற்கவில்லை. அத்தோடு இம்முறை தணிக்கை ஆறுமாத காலத்துக்கு நீடித்ததும் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்தத் தவறவில்லை.

### உதவும் நாடுகளின் கூட்டம் அடுத்தமாதம்

இதற்கிடையில் — இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் அடுத்த மாதம் பாரிஸில் நடைபெற இருக்கையில், தணிக்கையை நீக்குவது பற்றிய அறிவிப்பு வெளிவந்திருக்கின்றது.

யுத்தத்துக்குப் பெருந்தொகைப்பணத்தைச்செலவிடுவதில் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் அரசாங்கம், அது தொடர்பாக உதவும் நாடுகளின் கூட்டத்தில் எழுப்பப்படக் கூடிய பல கேள்விகளைச் சமாளிப்பதற்கு நேரகாலத்துடனேயே ஆயத்தமாக வேண்டிய நிலையில் இருக்கின்றது.

அந்த ''முன் ஆயத்தங்களில்'' ஒன்றுதான் இராணுவச் செய்திகள் மீதான தணிக்கை நீக்கம் என்று ஒரு சாரார் நம்புகின்றனர்.

### அமைச்சரவையிலும் சலசலப்பு

தணிக்கை நீக்கம் பற்றிய அறிவிப்பு அமைச்சரவையிலும் சலசலப்பை ஏற்படுத்தத் தவறவில்லை.

தணிக்கை நீக்கப்பட்டது பற்றிய அறிவிப்பை அமைச்சர் ரத்வத்தை நாடாளுமன்றத்தில் வெளியிட்டதற்கு அடுத்த நாள், அமைச்சரவை கூடிய போது இது பற்றிய கேள்விகளை அங்கு சில அமைச்சர்கள் எழுப்பியதாகத் தெரிகிறது. சர்ச்சைக்குரியதாக இருந்த தணிக்கையை அமைச்சரவைக்குக் கூட அறிவிக்காமல் அவசர அவசரமாக நீக்கியது ஏன் என்று அவர்கள் வினா எழுப்பினர்.

''யாழ்ப்பாணக் குடாநாட்டையும் கிளிநொச்சியையும் கைப்பற்றியதுடன் ... நோக்கம் நிறைவேறி விட்டது. எனவே தணிக்கை நீக்கப்பட்டது.''—என்று அமைச்சர் அனுருத்தவும் —

''பத்திரிகைகளைச் சுதந்திரமாக இயங்க அனுமதிக்கும் அரசின் கொள்கைப்படி தணிக்கை நீக்கப்பட்டது.''—என்று தகவல் தொடர்புத் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவும்—

கருத்துக் கூறி அமைச்சரவையில் சலசலப்பை அடக்கினர்.

### இருட்டு விலகியது

எது, எப்படியிருப்பினும் தகவல் தொடர்பு சாதனங்களை கடந்த ஆறுமாதகாலமாகச் சூழ்ந்திருந்த இருட்டு விலகிவிட்டது. இந்த இருட்டு மீண்டும் பிடிக்கக் கூடாது என்பதுதான் சுதந்திர பத்திரிகையாளர்களின் பிரார்த்தனை.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் எத்தனையோ தடவைகள் தணிக்கை முறை நடைமுறைப் படுத்தப்பட்டு நீக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் இம்முறை தான் —இந்த ஆறு மாத காலத்தில் தான் — தமிழர்களின் 13வருடகால இன விடுதலைப் போராட்டத்தில் இலங்கையின் சரித்திரத்தையே உலுக்கும்— முல்லைத்தீவு முகாம் வீழ்ச்சி இடம் பெற்றிருக்கின்றது.

தெற்காசியாவிலேயே பெரும் இராணுவத் தோல்வி அல்லது பின்னடைவு என்று கருதப்பட்ட முல்லைத்தீவு முகாம் வீழ்ச்சி இடம்பெற்ற போது சுமார் ஒரு வார காலம் முழு உலகின் கவனமும் இலங்கை மீதே படிந்திருந்தது என்று கூறினால் அது தவறாகாது.

சர்வதேச தகவல்தொடர்பு சாதனங்கள் (பத்திரிகைகள் மற்றும் எலக்ட்ரோனிக் சாதனங்கள் உட்பட அனைத்தும்) முல்லைத்தீவு முகாம் வீழ்ச்சி பற்றிய செய்திகளைப் பரப்பிக் கொண்டிருக்க—

அரசு அதிகாரிகள் மட்டும் உள்ளூர் தொலைத்தொடர்பு சாதனங்கள் மீது தணிக்கை என்ற கட்டுப்பாட்டைத் திணித்து விட்டு முல்லைத் தீவுச் சம்பவம் பற்றிய உண்மைத் தகவல்களை தகவல் தொடர்பு சாதனங்களுக்கும், வெளியுலகுக்கும் அம்பலப் படுத்தி கசிய விட்டுக் கொண்டிருக்கும் ஆட்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக இருந்தார்கள்.

உண்மையில் கூறப்போனால் மனிதப் பேரழிவு பற்றிய தகவல்களை வெளியே தெரியாமல் மூடிமறைப்பதில்— செய்திகள் பரவாமல் தடுப்பதில் தான் — அதிக ... காட்டப்பட்டது.

என்றாலும் காலம் பிந்தியாவது — தணிக்கை நீக்கப்பட்ட பின்னர் — இந்த விவகாரம் பற்றிய தகவல்கள் உள்ளூர்ப் பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

கடந்த ஜூலை 18 ஆம் திகதி அதிகாலை விடுதலைப் புலிகள் முல்லைத்தீவு முகாம் மீது தாக்குதலை ஆரம்பித்தது முதல் அங்கு நடந்தது என்ன என்பதை இக்கட்டுரைத் தொடரில் வெளிப்படுத்துவதற்கு முன்னர் —

அங்கு ஒரு முகாமை இவ்வளவு காலமும் தொடர்ந்து பேணுவதற்கு அரசு ஏன் முடிவு செய்திருந்தது? இத்தாக்குதலை விடுதலைப் புலி

**தொகுப்பு: கவி**

கள் ஜூலை மாதத்தில் நடத்தியது அல்லது ஜூலை வரை தள்ளிப் போட்டிருந்ததுஏன்? என்பது போன்ற விவரங்களை முதலில் அறிந்துகொள்வது வாசகர்களுக்கு முல்லை முகாம் வீழ்ச்சி பற்றிய ஒரு தெளிவான பின்னணியைத் தருவதாக இருக்கும்.

### முல்லை இராணுவ முகாம்

முல்லைத்தீவு படை முகாம் 1970 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றது. 1985 ஆம் ஆண்டு சுமார் நான்கு சதுர கிலோ மீற்றர் பிரதேசத்துக்கு விஸ்தரிக்கப்பட்ட இந்த முகாம் இரண்டாம் ஈழப்போர் காலத்திலிருந்து அடிக்கடி விடுதலைப் புலிகளின் சிறிய அளவிலான தாக்குதல்களுக்கு அவ்வப்போது இலக்காகி வந்தது. எனினும் அந்தத் தாக்குதல்கள் அங்கு நிலை கொண்டிருந்த படையினரால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டு வந்தன என்றே கூறலாம்.

கடந்த ஆண்டில் பிரிகேடியர் கும்பன் பொஹ்ரன் இந்த முகாமில் நிலைகொண்டிருந்த பிரிகேட் அணிக்கு கட்டளைத் தளபதியாக இருந்த போது தான் அதன் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் கடைசித் தடவையாக மறுசீரமைக்கப் பட்டிருந்தன.

திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து அறுபது கிலோ மீற்றர் தொலைவில் தீவின் வடகிழக்கு முனையில் — ஏகாந்தமாக — வேறு தொடர்புகளற்ற சூழலில் — தனித்து விடப்பட்டுள்ள நிலையில் — இந்த முகாம் இவ்வளவு காலமும் புலிகளுக்கு இரையாகாமல் 1996 நடுப்பகுதி வரை தப்பிப் பிழைத்தது எப்படி? — என்று சில இராணுவ ஆய்வாளர்கள் மூக்கில் விரலை வைக்கின்றார்கள்.

ஓர் ஒதுக்குப்புறமாக இருக்கும் இந்த முகாமை தொடர்ந்து அங்கு பேண வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்ற கேள்வியையும் அவர்கள் எழுப்பத் தவறவில்லை.

### முகாமை மூடாதது ஏன்?

கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக அங்கு நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் அங்கிருந்து புறப்பட்டு எந்த ஓர் இராணுவ நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. அப்படி இருக்க, அங்கு முகாமை வைத்திருந்தது ஏன்? புலிகளின் பாய்ச்சலுக்கு இலக்காகவா? — இவ்வாறு ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் கேள்வி எழுப்புகின்றன.

முல்லைத்தீவு முகாமையும், பூநகரி முகாமையும் மூடிவிட்டு, அங்கிருக்கும் துருப்புகளை யாழ். குடா நாட்டுச் சண்டையில் பயன்படுத்தலாம் என்று கடந்த வருடம் முதலே இராணுவத் தலைமைப் பீடம் அரசை வற்புறுத்தி வந்தது.

ஆனால் வட—கிழக்கு கடற் பிரதேசத்தில் புலிகளின் படகுகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க முல்லைத் தீவு முகாம் அவசியமானது என கடற்படை வலியுறுத்தியதாலும்—

திருகோணமலைக்கும் — காங்கேசன் துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் கடற்படைத் தொடர் அணிகளுக்கு அவசர உதவி தேவைப்படும் பட்சத்தில் அதனை வழங்க இடை நடுவில் உள்ள முல்லைத்தீவு முகாம் உதவும் என்று கருதப் பட்டதாலும் —

யாழ்ப்பாணத்தைக் கைப் பற்றுவதற்காக கிழக்கில் பல முகாம்களை அரசு மூடிவிட்டது என்ற குற்றச்சாட்டு அரசுக்கு எதிராகத் தெற்கில் ஒலிக்கும் இச்சந்தர்ப்பத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கும் இந்த ஒரேயொரு முகாமையும் மூடி, மேலும் எதிர்ப்பைத் தேட அரசு விரும்பாததாலும்—

இந்த முகாமைத் தொடர்ந்து பேணுவதற்கு முடிவு செய்யப்பட்டது.

இதேசமயம் —


விடுதலைப் புலிகளும் குடாநாட்டை தமது முழுக்கட்டுப் பாட்டில் வைத்திருந்தபோது முல்லைத்தீவு முகாம் குறித்து அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

ஒதுக்குப்புறமாக இருந்த இந்த முகாம் அவர்களுக்கு அதிக இடைஞ்சலைத் தர

(6 ஆம் பக்கம் பார்க்க)



கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் லொறிகளில் ஏற்றத் தயாராகின்றன.



முல்லைத்தீவு இராணுவ முகாமில் கைப்பற்றப் பட்ட ஆயுதங்களை ஏற்றி இறக்குவதில் பொது மக்களையும் ஈடுபடுத்தினர் புலிகள். லொறிகளில் ஆயுதங்களை ஏற்றி இறக்கும் போது எடுக்கப்பட்ட படங்களே இவை. புலிகளின் பிரசாரப் பிரிவால் இப் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என் ஜனத்தை ஆற்றுங்கள் தேற்றுங்கள்''
(ஏசா, 40:1)

# "அடைக்கல கூடாரம்"

(Refuge Tabernacle Congregation)

மேற்படி எமது ஆலயத்தின் பிரதிஷ்டை ஆராதனை 21-10-96 திங்கள் அன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

அனைவரையும் கலந்து கொண்டு தேவ ஆசீர் பெற, அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்:- துணவி — (வட்டுக்கோட்டை)

போதகர்
ஊழியர்கள்
விசுவாசிகள்.

''இரட்சிப்பு கர்த்தருடையது;
தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய
ஜனத்தின் மேல் இருப்பதாக'' (சங், 3:8)

(8917)



உ

சாவகச்சேரி நகர் - வாரிவனேஸ்வரம் புராதன

# தான்தோன்றீஸ்வரர் வாரியப்பர் ஆலயம்

# கேதார கௌரி பூஜா விழா

அமிர்தபாஷினி தாயாருடன் உடனுறையும் வாரிவனநாதர் சன்னிதியில் 21 - 10 - 1996 திங்கள் முதல் 11 - 11 - 1996 தீபாவளித் திங்கள் வரை 21 தினங்களும் காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை மேற்படி உற்சவம் நடைபெறும்.

காலை 9-00 மணி முதல் 10-00 மணி வரை சிவன் அம்மன் அபிஷேக ஆராதனை - விசேட பூஜை 10-00 மணி முதல் 12 - 00 மணி வரை கேதார கௌரி பூஜை பஞ்ச முகார்ச்சனை கௌரி அம்பாள் திரு வீதியுலா.

சிவன் அம்பிகை அடியார்கள் மேற்படி உற்சவத்தில் கலந்து கொண்டு இறையருளைப் பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.

விழா பிரதம குரு, சிவாகம வீற்பத்ஜோதி
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்

இங்ஙனம்

பிரம்மஸ்ரீ
இரா. சத்தியானந்தசர்மா
ஸ்தானிககுரு, வாரிவனேஸ்வரம்.

இ. கருணாகரன்
(ஆலய தர்மகர்த்தா)

(43212)



சங்கானை

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வ. உ)

சங்க அங்கத்தவர்களுக்கான

# முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலுக்காக 30 09 96 இல் மூடப்பட்ட சகல கிளைகளின் வாக்காளர் பட்டியல்கள் எமது கிளை நிலையங்களிலும், தலைமைக் காரியாலயத்திலும் 20-10-96 தொடக்கம் தொடர்ந்து பத்து நாள்களுக்கு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இதுவரை திறக்கப்படாத எமது சங்கத்தின் பின்வரும் கிளைகளின் வாக்காளர் பட்டியல்கள் கீழ்க் குறிப்பிடப்படும் கிளை நிலையங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றினை சங்கத்தின் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

| திறக்கப்படாத கிளை நிலையங்கள் | | பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள கிளை நிலையங்கள் | |
|---|---|---|---|
| கிளை இல. | கிளையின் பெயர் | கிளை இல. | கிளையின் பெயர் |
| 08 | சுழிபுரம் குகன் | 07 | சுழிபுரம் மத்தி |
| 10 | பொன்னாலை | 12 | தொல்புரம் |
| 12 ஏ | நெல்லியான் | 12 | தொல்புரம் |
| 18 | வட்டு கிழக்கு | 17 | வட்டுசிவன் |
| 20 | வட்டு மேற்கு | 19 | வட்டு மூளாய் |
| 23 | அராலி வடக்கு | 27 | அராலி செட்டியாமடம் |
| 26 | அராலி ஐயனார் | 25 | அராலி - விக்கினேஸ்வரா |
| 28 | துணவி | 29 | சங்கரத்தை - துணவி |
| 32 | சிலம்பு புளியடி | 30 ஏ | சங்கானை - கிழக்கு மத்தி |
| 33 | சங்கானை கிழக்கு | 30 | சங்கானை - கிழக்கு மத்தி |
| 34 | தொல்புரம் மேற்கு | 11 | மூளாய் |

இவ் வாக்காளர் பட்டியல்கள் தொடர்பாக ஆட்சேபனைகள், மேன் முறையீடுகள் ஏதுமிருப்பின் 30-10-96 ற்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:-

இவ் வாக்காளர் பட்டியல்களில் ரூபா 100 பங்குப் பணம் செலுத்திய அங்கத்தவர்களின் பெயர்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தலைவர் செயலாளர்

(சி/3302)


# புலிகளால் தகர்க்கப்படும்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. அத்தோடு அந்த முகாம் மீது பெரும் தாக்குதல் ஒன்றைத் தொடுக்கக் கூடிய ஆட்பலமும் முல்லைத்தீவில் அவர்களுக்கு இருக்கவில்லை.

அவர்களது ஆளணியில் பெரும்பகுதி யாழ் குடாநாட்டில் பல்வேறு தேவைகளில — வேலைகளில் — ஈடுபடுத்தப்பட்டிருந்ததும் இந்த ஆட்பற்றாக்குறைக்கு ஒரு காரணம் எனலாம்.

## சமநிலை மாறியது

ஆனால் யாழ். குடாநாட்டின் கணிசமான பகுதிகளை அரசுப் படைகள் கைப்பற்றியது இந்தச் ''சமநிலையை'' அப்படியே குழப்பி, மாற்றி விட்டது; குடாநாட்டில் தாங்கள் பேணிய கட்டமைப்பை அப்படியே வன்னிக்கு மாற்ற வேண்டிய கட்டாய நிலை புலிகளுக்கு ஏற்பட்டது.

யாழ். குடாநாட்டில் தங்கள் ஆளணியைப் பல்வேறு வேலைகளில் ஈடுபடுத்திய புலிகளுக்கு, வன்னி பெருநிலப் பரப்பிற்கு நகர்ந்ததும் அங்கு அத்தகைய நானாவித பணிகளும் இல்லாமற் போனதால் — அல்லது அவர்களது கவனம் இராணுவத் தாக்குதல் நடவடிக்கை தவிர்த்து வேறு அரசியல் வேலைகளின் பக்கம் அதிகம் சிதறாமல் போனதால் — அங்கு அவர்களின் ஆட்பலத் தாக்குதல் வலு திடீரென உயர்ந்தது.

அத்தோடு வன்னி பெருநிலப்பரப்பே தங்களுக்கு இனி ''சரணாலயம்'' அல்லது ''புகலிடம்'' என்பது புலிகளுக்குப்புரிந்ததால் அதனைத் "துப்புரவு" செய்யவேண்டிய தேவையும் அவர்களுக்கு ஏற்பட்டது.

மேலும் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் இந்திய அமைதிப் படை காலத்தில் பாதுகாப்பாக இருந்த முல்லைத்தீவு '1 - 4' தளம் முல்லைத்தீவு முகாமிற்கு சில மைல் தூரமே தள்ளி உள்ளது. தங்களதும், தலைமைப் பீடத்தினதும் பாதுகாப்புக்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் இந்த முகாமுக்கு நெருக்கமாக ஒரு படைத்தளம் இருப்பது தங்களுக்கு எப்போதும் ஆபத்தைத் தருவதாகவே இருக்கும் என்பதும் புலிகளுக்கு நன்கு தெரியும்.

அது தவிர, யாழ். குடாநாட்டு கடலோரப் பகுதியின் கட்டுப்பாட்டை இழந்துள்ள விடுதலைப் புலிகளுக்கு தொடர்ந்தும் வெளியுலகுடன் போக்குவரத்துத் தொடர்பு வைத்திருப்பதற்கு வன்னி பெருநிலப்பரப்புடன் சம்பந்தப்பட்ட கிழக்கு கடலோரப் பகுதி மிகவும் அத்தியாவசியமானதாகும். அப்பிரதேசத்தில் 'முழுஆட்சி' செய்வதற்கு முல்லைத்தீவு கடலோர முகாம் புலிகளுக்கு ஓர் இடைஞ்சலாகவே இருந்தது.

மேலும் வன்னிப்பகுதியிலிருந்து எல்லைப்புறப் பகுதிகளான கொக்கிளாய், புல்மோட்டை மற்றும் ஜானகபுர, பதவியா போன்ற இடங்களுக்கு தரைவழித் தொடர்பை இலகுவாக்குவதற்கு முல்லைத்தீவு முகாமை அகற்றுவது அவசியமாகுகின்றது.

இன்னோரன்ன காரணங்களுக்காக முல்லைத்தீவு முகாம் மீது விடுதலைப் புலிகள் ''கண்'' வைத்தார்கள்.

## 7 மாத காலம் காத்திருந்தது ஏன்?

அந்த முயற்சியை புலிகள் கனகச்சிதமாக நிறைவேற்றியது எப்படி என்பதைப் பார்ப்பதற்கு முன்னர்—

யாழ். குடாநாட்டைக் கைவிட்ட பின்பும் இத்தகையதோர் தாக்குதலை நடத்த புலிகள் சுமார் ஏழு மாத காலம் காத்திருந்தது ஏன் என்பதை அறிவது பொருத்தமானதாக இருக்கும்.

இத் தாக்குதலுக்குத் தேவை [illegible] பட்ட பின்னடைவுகள் என்ன?

ஆயுதங்களை ஏற்றி வந்த புலிகளின் கப்பலை அரசுப் படைகள் கோட்டை விட்டது எங்ஙனம்? முல்லைத்தீவுத் தாக்குதலை தயார் பண்ணிக் கொண்டு வேறு இடத்தில் தாக்குதல் நடத்துவது போல் புலிகள் அரசுப் படைகளுக்கு பாசாங்கு காட்டியது எப்படி? முல்லைத்தீவுப் பெரும் தாக்குதலை ஜூலையில் நடத்துவதற்கு புலிகள் முடிவு செய்தது ஏன்? —போன்ற விவரங்களை இக்கட்டுரைத் தொடரின் நாளைய அத்தியாயத்திலும் அதைத் தொடர்ந்து வரும் அத்தியாயங்களிலும் பார்ப்போம்.

(வளரும்)

# சித்தாண்டியில் பாலம் தகர்ப்பு

கொழும்பு, ஒக். 20

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டியில் மேலும் ஒரு பாலம் இனந்தெரியாதவர்களால் உடைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கடந்த புதன் கிழமை இடம்பெற்றதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இப்பகுதியில் ஒருவாரத்தில் உடைக்கப்பட்ட 2 ஆவது பாலம் இதுவாகும். பாலம் உடைக்கப்பட்டபோது அருகில் இருந்த 8 வீடுகள் சிறு சேதத்துக்குள்ளாகின.

(இ-3)


ஓம் சாயிராம்

# சத்யசாயி இலக்கிய நூலகம்

# திறப்பு விழா

காலம்:- 21 - 10 - 96 திங்கள் விஜயதசமி
காலை 11.00 மணி (இலங்கை நேரம்)

இடம்:- இலங்கை வங்கி பருத்தித்துறை
கிளைக்கு அருகாமை

இலங்கை சத்யசாயி நிறுவனங்களின்
மத்திய இணைப்பாளர்

ஸ்ரீ. S. சிவஞானம்

அவர்களால் திறந்து வைக்கப்படும்.

பொதுமக்கள் பாவனைக்கு மறுநாள் (22-10-96) முதல் தினசரி (ஞாயிறு, விடுமுறை தினங்கள் நீங்கலாக) மு.ப 11.00 முதல் பி.ப 2.30 வரை (இலங்கை நேரம்) திறந்திருக்கும்.

சாயி நூல்கள், படங்கள், மோதிரம்
போன்றவை விற்பனைக்குக் கிடைக்கும்.

ஜெய் சாயிராம்

வடபிராந்திய சத்யசாயி நிறுவனங்களின்
இணைப்புக்குழு

20 - 10 - 96

(சி-3290)



உ

# இலங்கை வங்கி

பல லட்சம் பெறுமதியான மகத்தான பரிசுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்க இருக்கும்

# இலங்கை வங்கியின் "பொன்மனை" குடும்ப சேமிப்புத் திட்டம்

நீங்களும், உங்கள் குடும்ப அங்கத்தவர்களும் சேமிக்கும் நோக்குடன், எமது இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட

- ★ மகளிர் பொற்கணக்கு
- ★ சிறுவர் சேமிப்புக்கணக்கு (பொன் அரும்புகள் கணக்கு)
- ★ சேமிப்புக்கணக்கு
- ★ சேமிப்புச் சான்றிதழ் கணக்கு

என்பவற்றுள் ஏதாவது வகைச் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிக்க இருக்கிறீர்களா, அல்லது ஏற்கனவே அவற்றை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகிறீர்களா? அப்படியென்றால் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் —

- 16 லட்சம் ரூபா பெறுமதியான புத்தம்புதிய வீடு ஒன்று
- 12 லட்சம் ரூபா பெறுமதியான புத்தம்புதிய ஒரு நிஸான் சண்ணி கார்
- 5 லட்சம் ரூபா பெறுமதியான புத்தம்புதிய மாருதி கார்
- ஒரு 20'' கலர் தொலைக்காட்சிப் பெட்டி
- ஒரு குளிர்சாதனப் பெட்டி
- தையல் இயந்திரம் ஒன்று
- ஒவ்வொன்றும் 10,000/- பெறுமதியான கொடைச் சீட்டுக்கள் (50 பேருக்கு)
- 50 பாடசாலை மாணவர்களுக்கு தலா 10,000/- கொண்ட புலமைப்பரிசில்கள்

இத்தனை மாபெரும் பரிசுகளை உங்களுக்கு வழங்க இருக்கும் இலங்கை வங்கியின் 'பொன்மனை' குடும்ப சேமிப்புத் திட்டத்தில் நீங்களும் கலந்து கொள்ளும் நல்வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்க இருக்கிறது.

மேற்கூறிய மகத்தான பரிசுகளை மாத்திரமல்லாமல், வங்கிச்சேவை சம்பந்தமான மேலும் பல விசேட அனுகூலங்களையும் உங்களுக்கு வழங்க இருக்கும் எங்கள் இலங்கை வங்கியின் ''பொன்மனை'' குடும்ப சேமிப்புத் திட்டத்தில் நீங்களும் பங்குபெற இன்றே நீங்கள் கணக்கு வைத்திருக்கும் அல்லது கணக்குகளை ஆரம்பிக்க இருக்கும் இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

(சி/3309)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அனுமதி: 26, 000 பேர் விண்ணப்பம்

பல்கலைக்கழக அனுமதி கோரி இதுவரை 26 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் வட பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களின் விண்ணப்பங்கள் இன்னும் வந்து சேர்ந்த வண்ணம் இருப்பதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

1979 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பல்கலைக்கழக அனுமதி கோரி ஆகக் கூடுதலான மாணவர்கள் விண்ணப்பித்திருப்பது இம்முறைதான் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மானிய ஆணைக் குழுவுக்கு கிடைத்த விண்ணப்பங்கள் மாவட்ட ரீதியாக இப்போது வகுக்கப் பட்டுவருவதாக ஆணைக் குழுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான வெட்டுப்புள்ளி விவரம் டிசம்பர் முதல் வாரத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது (இ-3)

## ஆஸ்பத்திரியில் கட்டாக்காலி நாய்கள்

யாழ். ஆஸ்பத்திரியில் கட்டக்காலி நாய்களின் தொல்லை மீண்டும் அதிகரித்துள்ளது.

ஆஸ்பத்திரி நடை பாதைகளிலும், வாட்டுகளுக்குள்ளும், மலசலம் கழித்தும், குப்பைவாளிகளை இழுத்துக் கொட்டியும் இந்த நாய்கள் பெரும் தொல்லை கொடுக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

## விண்ணப்பப் படிவங்கள்

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் பட்டப் படிப்பியல் நெறிகளுக்கான (1996 — 1997 கல்வியாண்டு) அனுமதி விண்ணப்பங்கள் இப்போது விற்பனையாகின்றன. விரைந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

பூபாலசிங்கம்
புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி 3313)

# படகு விபத்தில் இறந்த மற்றும் 7பேரின் விவரம்

கொழும்பு, ஒக். 20

கடந்த 14ஆம் திகதி மன்னாரில் இருந்து இந்தியா சென்று கொண்டிருந்த படகு விபத்தில் இறந்த 14 பேரில் மேலும் சிலரின் விவரங்கள் கிடைத்துள்ளன.

கடந்த 18ஆம் திகதி உதயனில் ஏழு பேரின் பெயர் விவரங்கள் வெளியாகியிருந்தன. ஏனைய ஏழு பேரின் விவரங்கள் வருமாறு:-

★ அருந்தவராசா ரதி (80 வயது) — ஆதி கோவிலடி, வல்வெட்டித்துறை.
★ அவரது மகள் அனித்தா (5 வயது)
★ யுவராசா ராதா (31வயது) — ஆதி கோவிலடி, வல்வெட்டித்துறை.
★ செ. புஷ்பராணி (53வயது) — நல்லூர்.
★ மேரி திரேசா — (54வயது) — நல்லூர்.
★ ப. கனகசபை (23வயது) — யாழ். கச்சேரியடி.
★ சிறீஸ்கந்தராசா (14வயது) — கரடிப்போக்கு.


# பரிசளிப்பு விழா 1996

யா/ வட்டு இந்துக் கல்லூரி, சித்தன்கேணி.

21 — 10 — 1996 திங்கள் முற்பகல் 9. 30 மணிக்கு
(பழையநேரம்)

கல்லூரி மண்டபத்தில்: திரு. ச. இராமலிங்கம்
(பதில் அதிபர்) தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினர்:-
திரு. ப. விக்னேஸ்வரன் அவர்கள்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர் - சங்கானைக்கோட்டம்)

சிறப்பு விருந்தினர்:-
பிரம்மஸ்ரீ ப. சர்வேஸ்வர ஐயர் அவர்கள்
(முன்னாள் உப அதிபர்)

பெற்றோர், பழையமாணவர், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள்.

யா/ வட்டு இந்துக்கல்லூரி. (43249)



# BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

★ A/L 97, 98 தூய, பிரயோக கணிதம் ★

★ இவ்வாரம் ஆரம்பமாகும் பகுதிகள் ★
PURE :— ★ சிக்கலெண், காவிகள் ★
APP :— ★ உராய்வு, சமநிலை ★

ஆசிரியர்:

திரு. ப. குணம் B. Sc

(43226)


# ஆறாம் ஆண்டு நினைவலைகள்





அமரர்கள்

கந்தையா ஜீவரட்ணம் (குமார்)
(வ. பி, போ. ச. மினிபஸ் சாரதி)

திருமதி சுமதி ஜீவரட்ணம்

அன்னையின் மடியில்: 17-07-1960
ஆண்டவன் அடியில்: 28-09-1990

திதி: 20-10-1996

நல் இதயங்கள் இரண்டு உள்ளத்தால் ஒன்றி
இல் வாழ்வில் இன்பமாய் வாழ்ந்தன
புல் அறிவு வஞ்சகரினால் வாழ்வு முடிந்தது
சொல் இறைவா! இது விதி முறையோ?
ஆறு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆறாது எம் மனங்களில் உங்கள் நினைவு!

உங்கள் பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்.

7, சென்மேரிஸ் 2 ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (43253)

# 1 ஆம் ஆண்டின் நினைவுப் பூக்கள்

மண் மகிழ 20-7-1921



கண் நெகிழ 30-10-1995

அமரர் க. சி. தாமோதரம்பிள்ளை
(உரிமையாளர், முருகன் அரிசி ஆலை)
திதி: 20-10-96

சீராண்ட செல்வமே சிவன்தாள் நீயடைந்து
ஓராண்டானதுவோ உன்னையெண்ணித் துடிக்கின்றோம்
பாராண்ட பண்புற்றே பான்மைமிகு மிறைவன்தாள்
பேராண்டு வாழியநீர் பெருமையிந்த உலகிருக்கும்.

ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள்!

— பணியாளர்கள்
முருகன் களஞ்சியம்,
முருகன் அரிசி ஆலை,
முருகன் ஹாட்வெயர்ஸ்.

கண்டி வீதி,
சாவகச்சேரி.
(8929)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பூவுலகில்: 24-01-1979



பொன்னுலகில்: 22-07-1996

செல்வன்
வேலுப்பிள்ளை தயாநிதி

22-07-1996 இல் சிவபதமடைந்த செல்வன் வேலுப்பிள்ளை தயாநிதி அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டோருக்கும், கடித மூலமும், நேரிலும் ஆறுதல் நல்கியோருக்கும், இதர உதவிகள் புரிந்தோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (20-10-1996) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியை மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

சரணவாய் மத்தி,
கரவெட்டி. (8926)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கதிர்காமர் பதில் அளித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் முன் எப்போதும் இல்லாதவாறு உறவுகள் மிகவும் சிறப்பாக இருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் பிரச்சினை தொடர்பாக மாத்திரம் அல்லாமல் எல்லா விடயங்களிலும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

இலங்கை வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மற்றும் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோருடன் பேச்சு நடத்த உள்ளார்.

சமீபத்தில் டில்லியில் நடைபெற்ற இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைபற்றிய கரத்தரங்கு ஒன்றில் உரை நிகழ்த்திய குஜ்ரால், விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கைக்கு இந்தியா உதவப் போவதில்லை என்று தெரிவித்திருந்ததால் அவரின் இலங்கை விஜயம் இலங்கை அரசியல் மட்டத்தில் முக்கிய மானதாகக் கருதப்படுகிறது. (இ-3)

# ஆயுதங்களை ஒப்படைக்க தமிழ்க் கட்சிகள் மறுப்பு!

## அரசுடனான உறவு முறிவடையும் நிலை

கொழும்பு ஒக். 20

ஆயுதங்களை ஒப்படைக்குமாறு பொலீஸார் விடுத்த கோரிக்கையை தமிழ்க் கட்சிகள் நிராகரித்து விட்டன.

இதனால் தமிழ்க் கட்சிகளுக்கும் அரசுக்கும் இடையிலான உறவு முறிவடையும் நிலையில் இருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தாம் பொலீஸாரின் கோரிக்கைக்கு இணங்கப் போவதில்லை என்றும் —

ஜனாதிபதிக்கு தாம் இது குறித்து முறையீடு செய்வதாகவும் தமிழ்க் கட்சிகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை தாம் ஆதரித்து வருவதால், புலிகளின் தாக்குதல்களில் இருந்து தம்மைப் பாதுகாக்க ஆயுதங்கள் தேவை என்று இவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்க் கட்சிகளிடம் கொடுத்த சில ஆயுதங்கள் குற்ற நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுவதாக தமக்கு அறிக்கைகள் கிடைத்திருப்பதாக பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

பொலீஸாரின் கூற்று ஆதாரமற்றது என்றும் — ஆயுதங்கள் தாம் ஒருபோதும் துஷ்பிரயோகம் செய்யவில்லை என்றும் —

இது சம்பந்தமாக தமக்கு எதிராக எந்த வித முறைப்பாடுகளும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை என்றும் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரான ரமேஷ் நடராசா தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் பொலீஸ் சப் — இன்ஸ்பெக்டர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து பொலீஸாருக்கும், இராணுவத்தினருக்கும் கூட்டாக ஈ.பி.டி.பி. புளொட், ரெலோ, ஈ.பீ.ஆர்.எல்.எவ் ஆகியவற்றின் அலுவலகங்களைச் சோதனையிட்டிருந்தனர்.

இது தொடர்பாக இடம்பெற்ற சம்பவங்களை அடுத்தே தமிழ்க் கட்சிகளிடம் பொலீஸார் ஆயுதங்களைக்கோரி இருந்தனர்.

ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தற்போது ஜேர்மனி சென்றுள்ளார்.

அவர் நாடு திரும்பியவுடன் அரசுடனான உறவு குறித்து முக்கிய முடிவு எடுக்கும் என்று தமிழ்க் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

## 30 நாள் அவகாசம்

ஸ்ரீலங்கா ஒக். 20

காஷ்மீர் மாநிலத்திலுள்ள தீவிரவாதிகள் 30 நாள்களுக்குள் சரணடைய வேண்டும் என அம்மாநில முதலமைச்சர் பாரூக் அப்துல்லா கோரியுள்ளார்.

சரணடையா விடில் பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிகளை எதிர் கொள்ள வேண்டியிருக்கும் என அவர் எச்சரித்துள்ளர்.

### எண்ணெய்த்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
''டெட்டினேட்டர்''களையும் வயர்களையும் மீட்டிருப்பதாக முகத்துவாரம் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

எண்ணெய்த்தாங்கி அமைந்துள்ள நிலையத்தை சுற்றியிருந்த சுற்று மதிலுக்கு அண்மையில் குப்பை மேட்டில் இவை கண்டு பிடிக்கப்பட்டதாகவும் —

பாதுகாப்புப் படையினரின் வீதிச் சோதனை காரணமாக எவராவது இதனைப் போட்டு விட்டுச் சென்றிருக்கலாம் என்றும் — மற்றொரு செய்தி தெரிவிக்கிறது. (இ-3)

### தமிழ்நாடு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மாற்ற மாநில அரசு கோரியுள்ளதாக வந்த தகவல்களை தமிழ் நாடு அரசு மறுத்திருக்கிறது.

இந்த வழக்கை சி. பி. ஐ யிடமிருந்து மாநிலக் காவல் துறைக்கு மாற்றித் தருமாறு கோரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை என நேற்றுச் சென்னையில் வெளியான அரசுச் செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது. (இ- 10)

### மக்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காகப் பல கிராம சேவையாளர் பிரிவுகளை ஒன்று சேர்த்துப் பாதுகாப்புப் படையினரின் அனுசரணையுடன் மக்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக் குழுக்களின் மூலம் மக்களின் பாதுகாப்பு மற்றும் குறைபாடுகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

இதற்கு மக்களின் பெரும் ஒத்துழைப்புக் கிடைத்துள்ளது என்பதாகும். (அ)

### ஆண்டவருக்கு...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)
பெறாமற் போகான். இப்படிப்பட்ட ஆட்சியாளரைக் கொண்ட மக்கள், பாரதியோடு சேர்ந்து. ''பூமியில் எவருக்கும் இனி அடிமை செய்யோம். பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்'' என்று பாடி, இறைவனையே நம்பி, அவருக்குரியதை அவருக்குச் செலுத்தி, ஆழமான விசுவாசத்தோடு அன்பு வாழ்க்கை வாழ்ந்து உறுதியடைய அழைக்கப்படுகின்றார்கள்.

இன்று தமிழ் மக்களாகிய எமது அழைப்பும் இது தானோ?

— அருட்திரு.
இரா. சூசைநாதன்

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா ஆழ்வாழ்பிள்ளை

(சக்கரவாணி)

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா ஆழ்வாழ்பிள்ளை 19 - 10 - 96 கைதடியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும், திருமதி தங்கமுத்து செல்லையாவின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஞானதீபம் மற்றும் சின்னம்மா ஆகியோரின் அன்புக் கணவரும், வனஜா, வனிதா (கனடா), வசந்தா (யாழ். போதனா வைத்திய சாலை), வதனா (வவுனியா), வதனி, நிர்மலா, சிவசக்தி, வாகினி, சிறிதரன், சபேசன், வரதன், ரகுநாதன் (யாழ். போதனா வைத்தியசாலை), ரவிச்சந்திரன், குகனேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20-10-96) ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 (புதிய நேரம்) மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

கைதடி தெற்கு,
கைதடி. (43259)

### பொன்னையா ஐயாத்துரை

(முருங்கன்)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா ஐயாத்துரை அவர்கள் 19-10-96 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் முத்தம்மாவின் அன்புக் கணவரும், விஜயகுமாரன் (பப்புவநியூக்கினியா), சறோஜினி தேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், அற்புதானந்தராசா (சுவிஸ்), வசந்தமாலா ஆகியோரின் மாமனாரும், தேவசங்கர், ராஜ்சங்கர், கிரிதர், கஜகோபன் சர்விகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இருளன் மயானத்தில் பி.ப.1.00 மணியளவில் நடைபெறவுள்ளன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி முத்தம்மா
(மனைவி)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (43262)

### ஆறுமுகம் கந்தையா

கைதடிதெற்கு, கைதடியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஆறுமுகம் கந்தையா 18 - 10 - 96 காலை இறைவனடி சேர்ந்தார்.

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், ஆறுமுகம் (கொழும்பு), சந்திரசேகரம், A. K. சின்னத்தம்பி (கொழும்பு), சண்முகரத்தினம் (நோர்வே), கனகம்மா, நடராசா (மல்லாவி), கனகரத்தினம் (கனடா), செல்வரத்தினம் (கனடா), நாகேந்திரம் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத்தகப்பனாரும், சீதா (கொழும்பு) பத்மாவதி, புனிதவதி, ரவீந்திராதேவி, காலஞ்சென்ற கனகராசா மற்றும் மாலதி, இந்திரா, நகுலாம்பிகை, உமாராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ரீதரன் (சுவிஸ்), ராதிகா, ஸ்ரீ றமனேஸ்வரன் (சுவிஸ்), கலாமோகன், ஸ்ரீ நளினா, சத்தியவிஷ்ணு, விஷ்ணுகாந்த், விஷ்ணுதாரகை, யதீசன் (நோர்வே), கிருபா (நோர்வே), கலாதீபன் (கொழும்பு), காயத்திரி, கத்தூரி, பௌத்திரா, பிரகாசன், தர்சன் (கனடா), சஜ்ஜித் (கனடா), அனுஷன் (நியூசிலாந்து), அர்ச்சனா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18-10-96 பிற்பகல் 3.00 மணிக்கு கைதடி மயானத்தில் நடைபெற்றன.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சந்திரசேகரம்
(மகன்)

கைதடி தெற்கு,
கைதடி. (43263)


## தேவை!

ஸ்தாபனம் ஒன்றை மேற்பார்வை செய்து நிர்வகிக்கக் கூடிய அனுபவமுள்ள ஒருவர் தேவை. இளைப்பாறிய உத்தியோகஸ்தரும் விரும்பத்தக்கது.
விற்பனையாளரும் தேவை.
விண்ணப்பிக்கவும்:

இல 548, மே/பா உதயன்
[illegible]
(43242)


## 33-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் வல்லிபுரம் கார்த்திகேசு

மண்ணில் 16-06-1922
விண்ணில் 18-09-1996

அன்பின் திருவுருவாய், பாசத்தின் சிகரமாய்
பாரினிலே எம்மைப் பாராட்டி வளர்த்த
எம் அன்புத் தந்தையே! காலம் எம்மைப்
பிரித்தாலும் கடமை செய்யக் காத்திருந்தோம்
காலன் எம்மை வஞ்சித்தான் கண்ணீர்
தான் எம் கடனோ? நேசமிகு உம்முகமும்
நிறைவான புன்சிரிப்பும் நீங்காதையா
எம் நெஞ்சை விட்டொருபோதும்;

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை
வேண்டி நிற்கும்.

மக்கள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
தா.தில்லைநாதன் (சிவம்)
(மருமகன்)
44/8, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி,
யாழ்ப்பாணம். (C/3316)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/3 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org